


ஈரோடு மத்திய மாவட்டம், பவானி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.ஏ.சந்திரசேகர் தாயார் திருமதி பெத்தாயம்மாள் மறைவையொட்டி முன்னாள் அமைச்சரும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திவிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அதுபோது ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், என்.டி.அறிவானந்தம், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், நெசவாளர் அணி கே.சரவணன், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.குமார் வடிவேல், அக்னி சந்துரு, குறிஞ்சி என்.தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### கடந்த தி.மு.க. அரசின் சிறப்பான

# மக்கள் நலத் திட்டங்களை தொடரச் செய்து நல்லாட்சியைத் தர வேண்டும்!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அறிக்கை!



திருச்சி, மே 13 -

முந்தைய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை தொடரச் செய்து அனைத்து தரப்பினரின் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெறுகின்ற நல்லாட் சியைத் தரவேண்டும் என்பதே தமிழ்நாடு மக்களின் எதிர்பார்ப்பாகும் என்றும், தமிழ்நாடு முதலமைச்சராக ஜோசப் விஜய்க்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வாழ்த்துதேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

'சிறந்த முறையில் மக்களுக் கான நலத்திட்டங்களையும், கல்வி, தொழில், பொரு ளாதாரம், விவசாயம் என பல்வேறு துறைகளில் தமிழ்நாடு செழிப்புற ஆட்சி செய்த தி.மு.க அரசு தொடர வேண்டும்' என மக்களிடம் வாக்குகள் கேட்டு எங்கள் கட்சியின் சார்பில் இரண்டு உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்குத் தேர்வாகி யுள்ளனர்.

ஆனாலும், உங்கள் கட்சி ஆட்சி அமைத்திட தனிப் பெரும்பான்மையை மக்கள் வழங்கவில்லை என்ற போதிலும் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்தி, மக்களாட்சி மாத்திரமே நமக்கானதாக இருக்க முடியும் என்பதால் புதிய அரசு அமைந்திட நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்கிறோம். இதுதான் சாத்தியமாகும் என்ற நிலையில் மிக நீண்ட பரிசீலனைக்குப் பிறகு எங்கள் கட்சியின் அவசர உயர்மட்டக் குழு கூட்டம் கூடி அரசு அமைக்க ஆதரவு தருவதாக முடிவு எடுத்து அறிவித்தோம்.

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களும் புதிய அரசு அமைப்பதில் தமிழ்நாடு ஆளுநர் மேலும் தாமதிக்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து அவரின் அரசியல் முதிர்ச்சியையும் மக்களாட்சியின் மேல் அவர் கொண்டிருக்கும் அக்கறையையும் வெளிக்காட்டி இருந்தார்.

அதன் அடிப்படையிலேயே தி.மு.க கூட்டணியில் அங்கம் வைக்கும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய நாங்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி புதிய அரசு அமைத்திட ஆதரவுக் கரம் நீட்டியுள்ளோம். ஆனாலும், நாங்கள் கொள்கை அடிப்படையில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியிலேயே தொடர்வதாகவும் அறிவித்திருக்கிறோம்.

அதன் பிறகே, ஆளுநர் அவர்கள் உங்களை அழைத்து நேற்றைய தினம் புதிய அரசை அமைத்திருக்கிறார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று உங்களின் முதல் உரையிலேயே ""தமிழ்நாடு அரசின் கஜானா முழுவதும் துடைக்கப்பட்டு இருப்பதாகவும், ரூபாய் 10 லட்சம் கோடி கடன் வைத்துள்ளதாகவும் குறிப் பிட்டு குறை கூறி தொடங்கி யிருப்பது ஆரோக்கியமற்றது.

எந்த அரசும் தேவைக்கேற்ற நிதியைப் பெற கடன் வாங்காமல் இருப்பதில்லை; அந்த கடனும் துறை சார்ந்த உயர்நிலை அதிகாரிகளும் பொருளாதார வல்லுனர்களும் ஒருசேர கலந்து ஆய்வு செய்தே அரசு நிர்வாகத்தின் வரம்புக்கு உட்பட்ட நிலையில் முடிவுகள் எடுத்து கையாளப்படுவது வழக்கம்.

இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளீர்கள். தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் வருவாய் மற்றும் நிதிநிலை சார்ந்த பலதரப்பட்ட சரியான தகவல்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் மூலம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டு தான் உங்களின் வார்த்தைகள் வெளி வர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

உங்கள் தலைமையிலான புதிய ஆட்சியின் மக்கள் நலத்திட்டங்கள், பொருளாதார மேம்பாடு, கல்வி மற்றும் தொழில் வளர்ச்சி போன்ற பார்வையில் மாத்திரமே ஒரு முதலமைச்சரின் உரை அமைந்தால் அனைத்து தரப்பினராலும் வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

எனவே, எடுத்த எடுப்பிலேயே குறைகள் சொல்லி ஆட்சியைத் தொடங்காமல், மக்கள் எதிர்பார்த்திடும் நல்ல, ஆரோக்கியமான, எல்லோருக்குமான சிறந்த ஆட்சியாக அமைந்திடவே விரும்பு கிறோம்.

எனவே, ஆரோக்கியமான அரசியலை முன்னிறுத்தி, சிறப்பான நிர்வாகத்தை நடத்தி, நாட்டு மக்களின் நலனை மாத்திரமே தாரக மந்திரமாகக் கொண்டு, மதக் காழ்ப்புணர்ச்சிகளுக்குக் கொஞ்சமும் இடம் தராமல் முந்தைய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை தொடரச் செய்து அனைத்து தரப்பினரின் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெறுகின்ற நல்லாட் சியைத் தரவேண்டும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

# திருவெறும்பூர் தொகுதியில் தனக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி!

## தெற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வீதி வீதியாகச் சென்று தெரிவித்தார்!



திருச்சி, மே 13 -

திருச்சி தெற்கு மாவட்டம், திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட ஆகிய பகுதிகளில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் . முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனக்கு வாக்களித்த வாக்காளர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் ஊராட்சிகளில் அசூர் பொய்கைகுடி தேநீர்பட்டி பழங்கனாங்குடி, பூலாங்குடி, எலந்தபட்டி, நவல்பட்டு, சூரியூர், அண்ணாநகர், கும்பக்குடி, அயன்புத்தூர், குண்டூர், சோழமாதேவி, திருவளர்ச்சிபட்டி, கிழக்குறிச்சி, முக்கிய வீதிகளின் வழியாக சென்று வாக்காளர்களைச் சந்தித்து வேட்பாளர், தனக்கு ஆதரவளித்த பொதுமக்களுக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகளும், கழகத்தின் முக்கிய நிர்வாகிகளும் இந்த நன்றி அறிவிப்பு நிகழ்வில் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன் கழக நிர்வாகிகள் சண்முகம் மாரியப்பன் பாலமுருகன் கயல்விழி சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விமான நிலையம் - கிளாம்பாக்கம் இடையே மெட்ரோ ரயில் திட்ட பணிகள் தொடக்கம்!

சென்னை, மே 12 -

சென்னை விமான நிலையம் - கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை இணைக்கும் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. சென்னையில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகள் மின்சார ரயில் மூலமாக வண்டலூர் சென்று அங்கிருந்து கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் செல்கின்றனர். மேலும் மாநகர பேருந்துகள் மூலம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் சென்றடைகின்றனர். இதனால் பயணிகளின் சிரமத்தை குறைக்க சென்னை விமான நிலையம் வரை உள்ள மெட்ரோ ரயில் திட்டத்தை கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

சென்னை புறநகர் பகுதியான தாம்பரம், பல்லாவரம், குரோம்பேட்டை உள்ளிட்ட பகுதிகள் அசுர வளர்ச்சி அடைந்து வரும் நிலையில் அப்பகுதியில் உள்ள ஜிஎஸ்டி சாலை உள்ளிட்ட முக்கிய சாலைகளில் தினந்தோறும் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதால், அந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை திட்டம் கொண்டு வரப்பட்டால் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் ஒழிக்க முடியும் என அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர். இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் இருந்து, கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் திட்டம் நீட்டிக்கப்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்து பல ஆண்டுகள் ஆன நிலையிலும் திட்டம் நிறை வேற்றப்படாமல் இருந்தது.

இந்நிலையில் சென்னை மெட்ரோ ரயில் திட்டம் கட்டம் 1ல் விமான நிலையத்திலிருந்து கிளா ம்பாக்கம் பேருந்து முனையம் வரை மெட்ரோ ரயிலை மேம்பால சாலையுடன் இணைத்து நீடிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசு சிறப்பு திட்டத் துறை செயலாளரிடம் மெட்ரோ நிர்வாகம் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், சென்னை விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை மெட்ரோ ரயில் சேவையை நீட்டிக்க ரூ.9,335 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், சென்னை விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரையிலான மெட்ரோ வழித்தடத்தில் சென்னை விமான நிலையம், பல்லாவரம், கோதண்டம் நகர், குரோம்பேட்டை, மகாலட்சுமி காலனி, தாம்பரம், இரும்புலியூர், பீர்க்கன்காரணை, பெருங்களத்தூர், வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் ஆகிய 13 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைய உள்ளது.

மேலும் பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர் மற்றும் வண்டலூர் வழியாகச் செல்லும், இது கிளாம்பாக்கம் பேருந்து முனையம், விமான நிலையம் மற்றும் தாம்பரம் ரயில் நிலையம் போன்ற முக்கிய போக்குவரத்து மையங்களுக்கு இணைப்பை வழங்கப்பட உள்ளது. இந்நிலையில் சென்னை விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரை 15.46 கிலோ மீட்டர் மெட்ரோ ரயில் வழித்தடத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் நிலம் கையகப்படுத்தும் பணிகளை தொடங்கவும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு அரசு அனுமதி வழங்கியது. ஆனால், பல்வேறு காரணங்களால் கிடப்பில் போடப்பட்ட இந்த திட்ட பணிகள், தற்போது மீண்டும் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், "கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் செயல்பாட்டுக்கு வந்ததிலிருந்து தென் மாவட்டங்களுக்கு பயணம் செய்யும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் விமான நிலையம் மற்றும் கிளாம்பாக்கம் இடையே நேரடி ரயில் இணைப்பு இல்லாததால் பயணிகள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இந்த பிரச்னைக்கு தீர்வாகவே புதிய மெட்ரோ திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுமார் 15 கிலோ மீட்டர் நீளத்தில் அமையவுள்ள இந்த பாதையில் 12 மெட்ரோ நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால் விமான நிலை யத்தி லிருந்து கிளாம்பாக்கம் வரை நேரடி மெட்ரோ பயணம் சாத்தியமாகும். இதன் மூலம் ஜிஎஸ்டி சாலையில் நீண்ட காலமாக இருந்து வரும் போக்குவரத்து நெரிசலும் குறையும்.

இந்த திட்டத்திற்கான விரிவான அறிக்கை ஏற்கனவே ஒன்றிய அரசிடம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தேசிய நெடுஞ்சாலைத் துறை, விமான நிலைய நிர்வாகம் மற்றும் குடிநீர் வாரியம் உள்ளிட்ட பல துறைகளுடன் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. நில அளவீடு மற்றும் பாதை வரைபடப் பணிகளும் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து, தற்போது ஆரம்ப கட்ட பணிகள் தொடங்கியுள்ளது,' என்றனர்.

### முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி

# ரூ.20 கோடி மோசடி; த.வெ.க. நிர்வாகி கைது!

## புதுக்கோட்டையில் பரபரப்பு!

புதுக்கோட்டை, மே 13 -

முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி ரூ.20 கோடி மோசடி செய்த த.வெ.க. நிர்வா கியை புதுக்கோட்டை போலீசார் கைது செய்த னர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருவப்பூர் பகுதியை சேர்ந்தவர் சரவணன் (வயது 35). இவர் தமிழக வெற்றிக் கழகத்தின் புதுக்கோட்டை மத்திய மாவட்டச் செயற்குழு உறுப்பினராக பதவி வகித்து வருகிறார்.

இவர் புதுக்கோட்டை பகுதியில் உள்ள தொழில் அதிபர்கள், வியாபாரிகள் மற்றும் டாக்டர்கள் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

இந்த நிலையில், சரவணன் தான் தொழில் செய்ய பணம் தேவைப்படுகிறது எனவும், அதில் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாகவும் கூறியுள்ளார். இதனை நம்பி புதுக்கோட்டையைச் சேர்ந்த தொழில் அதிபர்கள், முன்னணி வியாபாரிகள், டாக்டர்கள் என மொத்தம் 49 பேர் சரவணனுக்கு பெருந்தொகையை வழங்கியதாக கூறப்படுகிறது.

ஆனால் அவர் கூறியபடி பணத்தை திருப்பிக் கொடுக்காமல் ரூ.20 கோடி வரை மோசடி செய்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, சரவணனால் பாதிக்கப்பட்ட 20க்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் மாலை சென்று புகார் அளித்தனர். அதன் பேரில் போலீசார் விசாரணை நடத்தி, சரவணனை கைது செய்தனர். மேலும், இந்த மோசடியில் யாருக்காவது வேறு தொடர்பு உள்ளதா? என்பது குறித்தும், அவர் அந்த பணத்தை எங்கு முதலீடு செய்துள்ளார்? என்பது குறித்தும் அவரிடம் போலீசார் துருவி துருவி விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரூ.20 கோடி மோசடி செய் ததாக த.வெ.க. நிர்வாகி கைது செய்யப்பட்ட சம்ப வம் புதுக்கோட்டையில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தி உள்ளது.

### 2025 – 26 நிதியாண்டில்

# மதுரை ரயில்வே கோட்டம் ரூ.1,408 கோடி வருமானம் ஈட்டி புதிய சாதனை!

மதுரை, மே 13 –

மதுரை ரயில்வே கோட்டத்தில் 2025–26ஆம் நிதியாண்டில் மொத்த வருமானம் ரூ.1,408 கோடியாக உயர்ந்திருப்பதாக தெற்கு ரயில்வே அறிவித்து உள்ளது.

2025–26ஆம் நிதியாண் டில் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு கிடை த்துள்ள இந்த அதிக வருமானம் கடந்தாண்டை காட்டிலும் (ரூ.1,245 கோடியை விட) 13 சதவீதம் அதிகம் ஆகும்.

கடந்த நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு மொத்தம் ரூ.1,408 கோடி வருமானம் கிடைத்துள்ள நிலையில், இதில் பயணிகள் பயணச்சீட்டு விற்பனை மூலம் மட்டும் ரூ.886.32 கோடி வருவாய் பதிவாகி இருக்கிறது.

அதே நேரம் சரக்கு போக்குவரத்து மூலம் ரூ.411 கோடி வருவாய் கிடைத்து உள்ளது. இது நிர்ண யிக்கப்பட்ட இலக்கை விட 10% அதிகமாகும்.

இதர வருமானங்கள் என்கிற வகையில் பயணச்சீட்டு பரிசோதனை மூலம் ரூ.12.73 கோடி வசூலாகியுள்ளது.

97 சதவீத ரயில்களில் பயணச்சீட்டு பரிசோதனை நடத்தப்பட்டு, பயணச்சீட்டு இல்லாதோர் மற்றும் ரயில்வே சட்ட விதிகளை மீறிய வர்களிடம் அபராதமாக ரூ.12.73 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது .

உணவகச் சேவைகள் (Catering) மூலம் ரூ.7.92 கோடி வருவாய் கிடைத்துள்ளது, இது முந்தைய ஆண்டை விட 95.70% அதிகம் ஆகும். பார்சல் சேவைகள் மூலம் ரூ.10.78 கோடி வருமானம் கிடைத்துள்ளது.

பழைய இரும்பு பொருட்கள் (ஸ்கிராப்) விற்பனை மூலம் ரூ.27.38 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இந்த வருவாயானது தெற்கு ரயில்வே நிர்வாகம் நிர்ணயித்த ரூ.1,340 கோடி என்ற இலக்கை விட 5% கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது



சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர். இரா இராஜேந்திரன் பொன்னா பேட்டை பகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். பகுதி செயலாளர் கேபிள் ராஜா, கோட்டச் செயலாளர் லோகு மணிவண்ணன் , அவைத் தலைவர் முருகன் ஆகியோர் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அழகு திருநாவுக்கரசு

மே 13 (2015)



மாணவர் பருவத்தில் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பயின்ற போது திராவிட மாணவர் கழக அமைப்பாளராக செயல்பட்டதுடன் தமிழகம் முழுவதும் கல்லூரிகளுக்கு சென்று திராவிட மாணவர் கழக அமைப்புகளை உருவாக்கியவர்.

கழக விவசாய தொழிலாளர் அணியின் செயலாளராக இருந்தார். தஞ்சை மற்றும் திருவாரூர் மாவட்ட பகுதிகளில் அவர் செய்த பொதுச் சேவைகள் மூலம் மக்களிடம் நிரந்தர செல்வாக்கு பெற்றவராக விளங்கினார்.

தலைவர் கலைஞர் மற்றும் தளபதி அன்பை பெற்றவராக திகழ்ந்தார். இறுதிநாள் வரை தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு மற்றும் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்று சுயமரியாதைக்காரராக வாழ்ந்து மறைந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.